நிதி ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

(2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரியது)

நிதி ஆணைக்குழுவானது அரசியலமைப்பின் கீழ் வழங்கப்பட்ட செயற்பாட்டு கடமைகளிற்கமைவாக தொழிற்படுகின்றது. நிதி ஆணைக்குழுவின் உருவாக்கமும் அதன் பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகளும் அரசியலமைப்பின் 13வது திருத்தத்தில் உறுப்புரை 154(R)) இன் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நிதி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயல்பாடுகளை வெளிபடுத்துகின்றது

1. 2020 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளுக்கான வருடாந்த பாதீட்டு ஒதுக்கீடு

நாட்டில் சமமான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கில் மாகாணங்களின் தேவைகளை அடையும் பொருட்டு வருடாந்த பாதீட்டு ஒதுக்கீடுகள் செய்வதிலும் மற்றும் ஒன்பது மகாணங்களுக்கும் நிதியைப் பகிர்ந்தளிப்பதிலும் அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்வது நிதி ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகும்.

2020 ஆம் ஆண்டிற்குரிய மாகாண சபைகளிற்கான பாதீட்டு ஒதுக்கீடுகள் தொடர்பான பரிந்துரைகள் மாகாணங்களின் தேவைகளை அடிப்படையாக கொண்ட ஒரு முறைமையில் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் அன்று சமர்பிக்கப்பட்டது . ஆணைக்குழுவின் பரிந்துரைகளானது பிரதானமாக i) மாகாணங்களுக்கிடையில் நியாயமான முறையில் நிதிப்பகிர்வு, அரச கொடையிலிருந்து மாகாண சபைகளுக்கு போதுமான நிதியினை ஒதுக்கீடு செய்தல் போன்ற பாதீட்டு பரிந்துரைகள் மற்றும் ii) நாட்டு மக்களின் உயர் சமூக-பொருளாதார தரங்களுடன் சமமான பிராந்திய அபிவிருத்தியை அடைவதற்கும், பொது முதலீட்டு திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்கும் உப தேசிய மட்டத்தில் சேவை வழங்குவதற்கும் கொள்கை பரிந்துரைகளையும் உள்ளடக்குகின்றது. மேலும் ஆணைக்குழுவானது சமமான பிராந்திய வளர்ச்சியை அடைவதற்கும் திறம்பட அமுலாக்குவதற்கும் உள்ள முக்கிய பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளை அடையாளம் கண்டு, எடுத்துக்காட்டி மற்றும் இது போன்ற சிக்கல்களை தீர்க்க அதன் பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது.

2020 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைகுழுவின் பரிந்துரைகளானது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 29 ஆம் திகதி கூட்ட முடிவின் பிரகாரம் i) 2020 ஆம் ஆண்டு பாதீட்டு தயாரிப்பின்போது பரிந்துரைகளை கவனத்தில் கொள்ளுமாறு நிதி அமைச்சரை கோரியதுடன் ii) அரசியலமைப்பின் பிரிவு 154 ஆர் (7) இன் பிரகாரம் பாராளுமன்றத்தில் பரிந்துரைகளை முன்வைக்க ஒப்புதல் வழங்கியதுடன், மேலே உள்ள முடிவிற்கு (i) உட்பட்டு இந்த பரிந்துரைகள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாராளுமன்றத்திற்கு அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டது .

பொதுவாக, பாராளுமன்றத்தால் பாதீட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் நிதி ஆணைக்குழுவானது பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் பாதீட்டு ஒதுக்கீடுகளை மாகாண சபைகளுக்கு அறிவிக்கும். இருப்பினும், சாதாரண பாதீட்டுக்கு பதிலாக, இடைக்கால வாக்குப்பண கணக்கிற்கு பாராளுமன்றம் ஒப்புதலளித்திருந்தது. 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் திகதி இடைக்கால வாக்குப்பண கணக்கின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகையுடன் 2020 ஆண்டுக்கான பரிந்துரைக்கப்பட்ட மானியத்தொகையும் அவர்களின்

தகவல் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக பாராளுமன்றத்தால் மாகாண சபைக்கு அறிவிக்கப்பட்டது

2. 2019 ஆம் ஆண்டுக்கான மாகாண அபிவிருத்தி திட்டங்களை பரிசீலனை செய்தல்

நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட வழிகாட்டுதலுக்கு ஏற்ப ஒரு பொதுவான மற்றும் பயனுள்ள கட்டமைப்பில் தயாரிக்கப்பட்ட வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டங்கள் ஒன்பது மாகாண சபைகளிடமிருந்தும் நிதி ஆணைக்குழுவிற்கு கிடைக்கபெற்றது. ஒவ்வொரு மாகாண சபையின் வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டத்தையும் நிதி ஆணைக்குழு கவனமாகமீளாய்வு செய்தது. நிதி ஆணைகுழுவின் தலைவர், அங்கத்தவர்கள், செயலாளர், மற்றும் தொடர்புடைய ஏனைய உத்தியோகத்தர்களுடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்கள உத்தியோகத்தர்கள் அடங்கலான குழுவொன்று மகாணங்களின் மாகாண அபிவிருத்தி திட்டங்கள், நடைமுறை திட்டங்கள் மற்றும் நிறைவடைந்த திட்டங்களை மீளாய்வு செய்வதற்கு மாகாணங்களுக்கு விஜயம் மேற்கொண்டனர். பிரதம செயலாளர்கள், அனைத்து மாகாண அமைச்சு செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் இந்த மீளாய்வு கூட்டங்களில் பங்குபற்றினர்.

2019 ஆம் ஆண்டுக்கான ஒன்பது மாகாண சபைகளினதும் வருடாந்த அபிவிருத்தி திட்டங்களானது ஆய்வு செய்யப்பாட்டு மீளாய்வு கூட்டத்தின் கலந்துரையாடல்களின் பிரகாரம் சில திருத்தங்களை மேற்கொண்டு அவற்றினை அமுல்படுதுவதற்கு நிதி ஆணைக்குழு தனது இணக்கப்பாட்டினை வழங்கியுள்ளது .

3. மாகாணங்களின் அடுத்துவரும் ஆண்டுக்குரிய (மூலதன மற்றும் மீண்டெழும்) செலவீனத் தேவைகள் தொடர்பான பாதீட்டு வழிகாட்டிகளை வழங்குதல்

நிதி ஆணைக்குழுவானது மாகாண நிர்வாகத்திற்கு அவர்களின் மூலதன மற்றும் மீண்டெழும் பாதீட்டு தேவைகளை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல்களை ஒவ்வொரு வருடமும் வழங்குகிறது. 2020 ஆம் ஆண்டுக்குரிய தேவை மதிப்பீட்டு விபர வழிகாட்டல்கள் அவசியமான இணைப்புக்களுடன் தயாரிக்கப்பட்டு அனைத்து மாகாணசபை பிரதம செயலாளர்களுக்கும் 2020 ஆம் ஆண்டு முதற் காலாண்டில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வழிகாட்டல்களில் சேர்க்கப்பட்டுள்ள தேவை மதிப்பீட்டு படிவங்கள் மாகாணசபைகளால் மூலதன மற்றும் மீண்டெழும் தேவை மதிப்பீட்டை திறம்பட செய்து ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க உதவுகின்றன.

4. மாகாணசபைகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மாகாணசபைகளின் தேவைகளை மதிப்பீடு செய்தல் (மூலதன மற்றும் மீண்டெழும்)

நிதி ஆணைக்குழுவால் மகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கமைவாக அனைத்து மாகாணசபைகளும் 2020 ஆம் நிதி ஆண்டிற்கான தேசிய பாதீட்டில் வழங்கப்படும் கொடைகளிற்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவீனத் தேவைகளை சமர்பித்திருந்தன. மூன்றாம் காலாண்டில், அனைத்து மாகாண சபைகளினதும் மீண்டெழும் செலவுத் தேவைகள் நிதி ஆணைகுழுவால் தேவையான விளக்கங்களுடன் மீளாய்வு செய்யப்பட்டு அந்தந்த மாகாண சபைகளின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. ஆணைக்குழுவானது நிரல் அமைசுக்களிடமிருந்து எதிர்வரும் நிதி ஆண்டுக்கான ஆளணி பயன்பட்டிற்கான திட்டம் மற்றும் அவற்றிற்கான நிதித் தேவை ஆகியவற்றைப் பெற்று அவற்றையும் மீண்டெழும் செலவீனத் தேவை மதிப்பீட்டில் கவனத்திற் கொண்டது. மேலும் நிதி ஆணைக்குழு மாகாண உத்தியோகத்தர்கள் (பிரதி பிரதம செயலாளர் - நிதி, பாதீட்டு பணிப்பாளர்)மற்றும் பொது திறைசேரி உத்தியோகத்தர்களின் பங்கு

பற்றுதளுடனான கூட்டங்களை ஏற்பாடு செய்தது. மாகாண சபைகளின் மீண்டெழும் தேவைகள் மீளாய்வு செய்யப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டத்துடன் அவை மாகாண சபைகளிற்கான 2020 ஆம் ஆண்டிற்குரிய தொகுதி கொடையின் தேவையாக முன்வைக்கப்பட்டது .

நிதி ஆணைக்குழுவால் மாகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாகவும் மற்றும் அந்தந்த மாகாணங்களின் இடைக்கால அபிவிருத்தி திட்டங்களுக்கமைவாகவும் அனைத்து மாகாணசபைகளும் தேசிய பாதீட்டின் மூலமான மூலதன கொடைக்கான தேவைகளை சமர்பித்திருந்தது. மாகாணசபைகளால் சமர்பிக்கப்பட்ட மூலதன தேவைகளை நிதி ஆணைக்குழு ஆய்வு செய்தது. மாகாண செயலாளர்கள் மற்றும் மாகாண பணிப்பாளர்களின் பங்குபற்றலுடன் அவசியமான துறைகளுக்கு துறை ரீதியான கூட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன. மேலும் தேசிய பாதீட்டிலிருந்து அனைத்து மாகாண சபைகளுக்குமான துறைகளுக்கான மூலதன நிதித் தேவைகள் மற்றும் மூலதன தேவையின் இறுதி தொகையினை நிர்ணயிப்பதற்கும் அனைத்து மாகாண பிரதி பிரதம செயலாளர்களுடன் (திட்டமிடல்) விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்றது.

5. மகாணசபைகளுக்கான குறைநிரப்பு பாதீட்டு ஒதுக்கீடு (மீண்டெழும்) – 2019)

2020 ஆண்டுக்காலப்பகுதியில் நிதி ஆணைக்ககுழு மொத்த குறைநிரப்பு பாதீட்டு ஒதுக்கங்களாக மீண்டெழும் செலவீனத்தின் கீழ் ரூபா **14,024** மில்லியங்களை மாகாண சபைகளுக்கு பரிந்துரை செய்துள்ளது. இதன்படி மீண்டெழும் செலவீனத்திற்கான மொத்த குறைநிரப்பு பாதீட்டு ஒதுக்கங்களுக்கான பரிந்துரைகளானது ரூபா **14,024** மிலியன்கள் ஆகும். நிதி ஆணைக்குழுவானது. ஆரம்ப குறைநிரப்பு பாதீட்டு ஒதுக்கங்களான ரூபா **3,770** மில்லியங்களுக்கு மேலதிகமாக ரூபா **10,254** மில்லியன்கள் குறைநிரப்பு பாதீட்டு ஒதுக்கங்களாக பின்னர் மாகாண சபைகளின் வேண்டுகோளுக்கமைவாக பரிந்துரை செய்துள்ளது.

2019 ஆம் ஆண்டு நான்காம் காலாண்டுப் பகுதியில் வடமத்திய மாகாணத்திடமிருந்து ரூபா **176.4** மில்லியன்களுக்கான குறைநிரப்பு பாதீட்டு ஒதுக்கங்களுக்கான கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றன. எவ்வாறாயினும் 2019 ஆம் ஆண்டின் ஆரம்ப பரிந்துரைகளில் இவை உள்ளடக்கப்படிருந்தமையினால் நிதி ஆணைக்குழுவால் இவை கவனத்திற் கொள்ளப்படவில்லை.

6. மாகாணசபைகளின் ஆளணி மீளாய்வு

மாகாணசபைகளின் ஆளணி மதிப்பீடு, முகமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணிகள் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு என்பவற்றால் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இச் செயல்முறையில் நிதி ஆணைகுழுவானது தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட பன்னிரெண்டு கூட்டங்களில் கலந்து கொண்டதுடன் மாகாண சபைகளின் ஒவ்வொரு நிறுவனங்களின் கீழும் உள்ள ஆளணி தேவைகள் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது.

7. நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை – 2017,2018 மற்றும் 2019

2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை மும் மொழிகளில் தயாரிக்கப்பட்டு மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு 2019 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவின் தலைவர் திரு யு.எச்.பலிஹக்கார அவர்களினால் சமர்பிக்கப்பட்டுள்ளது.

இன் நிகழ்வில் நிதி ஆணைக்குழுவின் அங்கத்தவர்கலான கலாநிதி. இந்திரஜித் குமாரசுவாமி, கலாநிதி.ஆர்.எச்.எஸ்.சமரதுங்க,பேராசிரியர்.எச்.எம்.ஸபருல்லாஹ், திரு.வி.கனகசபாபதி மற்றும் நிதி

ஆணைக்குழுவின் செயலாளர் திரு.எ.ரி.எம்.யு.டி.பி.தென்னகோன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இவ் அறிக்கையானது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது

2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் அமைச்சரவை பத்திரத்திற்கான மூன்று இணைப்புக்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி ஜனாதிபதி செயலகதிற்கு கையளிக்கப்பட்டது.

- *2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகை அறிக்கை*
- *2018 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள்.*
- *நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகையை அதிகரிப்பதற்காக இணைத்து கொள்ளப்படவேண்டிய நடுத்தர கால அளவீடுகளின் சுருக்கம்*

2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் விரிவான ஆண்டறிக்கை மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வரிக்கையின் இலத்திரனியல் வடிவம் உத்தியோகபூர்வ இணையதளத்தில் உள்ளது. அதே நேரத்தில் 2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை தயாரிக்கும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது செயன்முறையில் உள்ளதுடன் 2020 ஆம் ஆண்டு மே மாதமளவில் வெளியீடு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது .

8. நிதி ஆணைக்குழுவின் செயலற்றுகை அறிக்கை

நிதி ஆணைக்குழுவின் கலாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கைகள் ஒழுங்கு முறையாக அரசியலமைப்பு சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பாராளுமன்றத்திலும் சமர்பிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்கான மற்றும் காலாண்டுக்கான செயலற்றுகை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு தொடக்கத்தில் அரசியலமைப்பு சபைக்கும் பாராளுமன்றதிற்கும் சமர்பிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் முதலாவது காலாண்டு செயலற்றுகை அறிக்கை 2019 ஜூலை 04 ஆம் திகதி பாராளுமன்றதிற்கு சமர்பிக்கப்பட்டது மற்றும் நிதி ஆணைக்குழுவின் இரண்டாவது காலாண்டு செயலற்றுகை அறிக்கை 2019 அக்டோபர் 28 அன்று அரசியலமைப்பு சபையின் அனுமதியைப் பெற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. நிதி ஆணைக்குழுவின் மூன்றாவது காலாண்டு செயலற்றுகை அறிக்கை 2019 நவம்பர் 27 அன்று அரசியலமைப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2019 டிசம்பர் 12 அன்று அனுமதி வழங்கப்பட்டது .

9. ஆணைக்குழுவிற்கான புதிய கட்டிடம்

இல 03, சரண மாவத்தை ராஜகிரியவில் உள்ள நிதி ஆணைக் குழுவின் புதிய கட்டிடமானது மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் கரு ஜயசூரிய , கௌரவ டாக்டர்.ஹர்ஷா டி சில்வா, கௌரவ மாகாண ஆளுநர்கள் மாகாண சபை முதலமைச்சர்களின் பிரசன்னத்துடன் வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டது. இந்நிகழ்வில் ஏனைய அழைப்பாளர்களும் மற்றும் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

10. நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமனம்

அரசியலமைப்பின் உறுப்புரை 41B மற்றும் 154 R (1) (C) இன் கீழ் நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக கீழ் வரும் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மேதகு ஜனாதிபதி அவர்களால் மீள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் : திரு. உதித்த ஹரிலால் பலிஹக்கார

உறுப்பினர் :,திரு. வி. கனகசபாபதி

உறுப்பினர் :பேராசிரியர். எச்.எம். ஸபருல்லாஹ்

இதற்கு மேலதிகமாக, அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (1) (a) மற்றும் (b) இன் படி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் திறைச்சேரி செயலாளரும் ஆணைக்குழுவின் பதவிவழி உறுப்பினராக பணியாற்றுவர்.

11. ***சுயாதீன ஆணைக்குழுவின் முதல் மூன்று ஆண்டுகளில் மதிப்பீடு***

சுயாதீன ஆணைக்குழுவின் பங்கு குறித்த இரண்டு தேசிய சிம்போசியங்களின் விளைவாக, அரசியலமைப்பு கற்கைகள் நிறுவனம் சுயாதீன ஆணைக்குழுவின் முதல் மூன்று ஆண்டுகளில் அவர்களின் முழு விரிவான மதிப்பீட்டை மேற்கொண்டது. அரசியலமைப்பு கற்கைகள் நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட நிதி ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் திரு.அசோகா குணவர்தன அவர்களால் இது நடத்தப்பட்டது.

இந்த பணியில் திரு குணவர்தன நிதி ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் சுருக்கமாக கலந்துரையாடினார் மற்றும் அவரது அறிக்கை 2019 அக்டோபரில் அரசியலமைப்பு கற்கைகள் நிறுவனத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

12. நிதி ஆணைக்குழுவின் தரவு தளம் மற்றும் தரவு முகாமைத்துவ முறைமை

மீண்டெழும் செலவினங்களின் தரவு முகாமைத்துவ முறைமைக்கான (MIS) மென்பொருள் அபிவிருதியாளர் "தீக்க்ஷன" மென்பொருள் திட்டத்தின் இறுதி வடிவத்தை மூலக் குறியீடு மற்றும் பயன்படுத்துநர் கையேடு ஆகியவற்றுடன் நிதி ஆணைகுழுவிற்கு சமர்ப்பித்துள்ளனர். பயன்படுத்துநர் கையேட்டில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருப்பதால், மென்பொருள் அபிவிருதியாளர் அதனை திருத்தம் செய்து மீண்டும் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளனர். "தீக்க்ஷன" மற்றும் நிதி ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் கூட்டாக இணைந்தது நிதி ஆணைக்குழுவின் உண்மையான தேவைக்கு ஏற்ப அமைப்பில் உள்ள இணக்கத்தன்மையை உறுதிப்படுத்த சில கூட்டங்களை நடத்தினர்.

ஆசியா மன்றத்தின் ஆலோசனைக்கிணங்க நிதி ஆணைகுழுவானது "தீக்க்ஷன" மென்பொருள் அபிவிருத்தியாளருடன் எவ்விதமான மேலதிக கட்டணங்களுமின்றி தேவையான திருத்தங்களை மேற்கொள்ளவும் சீரமைக்கவும் ஆறுமாதகால பராமரிப்பு ஒப்பந்தமொன்றை முன்வைத்தது. இது பரிசீலனையின் கீழ் உள்ளதுடன் 2020 ஆம் ஆண்டு ஜனவரியில் கைசாத்திட எதிர் பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் நிதி ஆணைக்குழுவானது 2020 ஆம் ஆண்டு மீண்டெழும் செலவீன பாதீட்டு மதிப்பீடுகளில் தரவு முகாமைத்துவ முறைமையை மென்பொருள் அபிவிருத்தியாளரின் உதவியுடன் இணைத்துக்கொண்டுள்ளது.

13. நிதி ஆணைக்குழுவின் சட்டவரைபு

2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களதுடனான கலந்துரையாடலின் இணக்கப்பாட்டிற்கு அமைவாக திருத்தப்பட்ட நிதி ஆணைக்குழுவின் சட்டவரைபு சட்ட வரைஞர் திணைக்களதிற்கு 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 3 ஆம் திகதி சமர்பிக்கப்பட்டது.

நிதி ஆணைக்குழுவின் உபகுழுவானது அரசியலமைப்பு ஆணையின்படி நிதி ஆணைக் குழு செயல்பட போதுமான அதிகாரங்கள் சட்டவரைபு மாதிரியில் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை கொண்டிருந்தது. 2019 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதி நடைபெற்ற உப குழு கூட்டத்தில் இந்த மாதிரி வரைபு திருத்தம் செய்யப்பட்டு சில முக்கிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அவ்வரைபு 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது. சட்டவரைபில் உள்ளடக்கப்பட்டிருக்கும் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு.

பகுதி I : ஆணைக்குழுவின் அதிகாரங்கள்

பகுதி II : நிதி

பகுதி III : நிதி ஆணைக்குழுவின் அலுவலர்கள்

பகுதி I V: ஆணைக்குழுவின் செயல்பாடுகள் மற்றும் நடைமுறைகள்

பகுதிVI : பொது

14. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம்

2019 ஆம் ஆண்டு நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் இடம்பெற்றது. நிதி ஆணைக்குழுவின் செயலாளர் தலைமையில் உள்ளக கணக்காய்வு குழு கூட்டம், முகாமைத்துவ கணக்காய்வு திணைகளத்தின் பணிப்பாளரின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது. கலந்துரையாடல்களின் முடிவுகள் நிதி ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களுக்கும் தொடர் நடவடிக்கையினை எடுப்பதற்காக அறிவிக்கப்பட்டது. இது தொடர்பில் ஆணைக்குழு உள்ளக கணக்காய்வு நடைமுறைகள் ஒழுங்குமுறை அம்சங்களுக்கு மேலதிகமாக செயல்திறன் அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் வழிநடத்துகிறது .

15. மாகாண கணக்காய்வு அறிக்கைகள் சம்பந்தமான ஆணைக்குழுவின் மீளாய்வு மற்றும் அவதானிப்புக்கள்

2019 ஆம் ஆண்டில் மகாண சபைகளின் 2018 நிதி ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கைகளை தேசிய கணகாய்வு அலுவலகத்திடமிருந்து நிதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றன. இவ்வறிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு கணக்காய்வு அவதானிப்புகளின் குறிப்புரைகள் ஆணைக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் அதன்பின் ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் மாகாண ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள் மற்றும் உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு தொடர் நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

16. நிதி ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டறிக்கை

நிதி ஆணைக்குழு அதன் செயல்பாட்டில் தேவைப்படும் அனைத்து இணக்கப்பாடுகளும் நிறைவேற்றப்படுமென உறுதி செய்கிறது. இது சம்பந்தமாக இணக்கப்பாட்டு அறிக்கைகள் மாதாந்த அடிப்படையில் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும்

17. நிதி ஆணைக்குழுவின் மூலோபாய திட்டத்தின் மீளாய்வு

நிதி ஆணைக்குழுவின் தற்போதைய மூலோபாய திட்ட பதிப்பு மீளாய்வு செய்யப்பட்டு மீள் உருவாக்கப்பட்டது. இது சம்பந்தமான தொடர் கலந்துரையாடல்கள் ஆணைக்குழு அலுவலர்களுடன் நடத்தப்பட்டதுடன் மூலோபாய திட்டதின் புதிய பதிப்பின் வரைபானது ஆணைக்குழு கூட்டத்திற்கும் சமர்பிக்கப்பட்டது.

18. நிறுவன அபிவிருத்தியும் வேலை ஆய்வும்

ஆசிய மன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஆலோசகர் நிதி ஆணைக்குழுவின் அனைத்து மட்ட அலுவலர்களின் பகுபற்றுதலுடன் வேலை ஆய்வை மேற்கொண்டர். வேலை ஆய்வின் இறுதி அறிக்கை தயாரிப்பில் இருபதுடன் இது 2020 ஆம் ஆண்டு ஜனவரியில் கிடைக்கப்பெறுமென எதிர்பர்க்கப்படுகிறது.

19. மனிதவளக் கொள்கை

பொதுநிர்வாக சுற்றறிக்கை இல:02/2018 யின் வழிகாட்டல்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டம் நிதி ஆணைக்குழுவின் அலுவலர்களின் திறன், மனோபாவம் மற்றும் செயலாற்றுகையை மேம்படுதுவதற்காக நிர்வாகப் பிரிவினால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இது திருத்தப்பட்ட மூலோபாய திட்டத்தில் பரிசீலனை செய்யப்யப்பட்டது.

20. உள்ளக கணக்காய்வு சாசனம்

2019 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் நிதி ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு சாசனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சாசனம் நிதி ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு பிரிவு பின்பற்ற வேண்டிய பணி, நோக்கம், அதிகாரம், சுதந்திரம் மற்றும் பொறுப்பு, நெறிமுறைகளை வழங்குகிறது.

21. மாகாண பாதீடு சம்பந்தமான கலந்துரையாடல் 2020

2020 ஆம் ஆண்டிற்கான மாகாண பாதீடு சம்பந்தமாக கலந்துரையாதடுவதற்கு அனைத்து மாகாண சபைகளினதும் பிரதம செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள், (திட்டமிடல்) பிரதி பிரதம செயலாளர்கள், (நிதி) ஆகியோரின் பங்குபற்றலுடன் நிதி ஆணைகுழு 2019 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி ஒரு கூட்டம் ஒன்றை நடத்தியது. நிதி ஆணைக்குழுவின் தலைவருடன் இரண்டு குழு அங்கத்தவர்களும், செயலாளர், நிதி ஆணைக்குழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் இக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

பின்வரும் பிரதான விடயங்கள் இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது

1. *வழமைபோல தேசிய வருடாந்த பாதீடு நிறைவேற்றப்படாது இடைக்கால வாக்குபண கணக்குக்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பதால் 2020 ஆம் ஆண்டிற்கான மாகாண சபையின் வருடாந்த பாதீடு தயாரிப்பதில் பரிந்துரைக்கப்பட்ட தொகைகளை பரிசீலித்தல்.*
2. *2019 ஆம் மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் கையிருப்பில் உள்ள சிட்டைகளின் கொடுப்பனவுக்காக மாகாண சபைகளின் இடைக்கால வாக்குபண கணக்கின் கீழான ஒதுக்கீடுகளை பயன்படுத்துதல்.*

22. 2020 ஆம் ஆண்டின் இடைக்கால வாக்குபண கணக்கு சம்பந்தமாக பொது திறைசேரியின் உதியோகத்தர்களுடனான கலந்துரையாடல்.

2019 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி 2020 ஆம் ஆண்டின் இடைக்கால வாக்குபண கணக்குக்கு சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்று பொது திறைசேரியின் பிரதி செயலாளர், தேசிய பாதீடு திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளின் பங்குபற்றலுடன் நிதி ஆணைக்குழுவில் நடைபெற்றது.

கலந்துறையாடல்களில் கவனம் செலுத்தப்பட்ட பகுதிகள்; மாகாண சபைகளுக்கு போதுமான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல், இடைக்கால வாக்குபண கணக்குக்கு, 2019 ஆம் ஆண்டு கையிருப்பில் உள்ள சிட்டைகளின் கொடுப்பனவு, 2020 ஆம் ஆண்டுக்கான மாகாண வருடாந்த அபிவிருத்தி திட்டம் தயாரிப்பு என்பனவாகும்

23. மாகாணங்களின் ஆளுநர்கள் மற்றும் பிரதம செயலாளர்களுடனான ஒரு கூட்டம்

செலவினங்களுக்காக அரசு வழங்குகின்ற ஒதுக்கீடு மற்றும் கட்டுநிதி விடுவிப்பு குறித்து 2019 ஜூலை 26 அன்று நிதி ஆணைக்குழுவில் ஒன்பது மாகாணங்களின் ஆளுநர்கள் மற்றும் பிரதம செயலாளர்கள் பங்குபற்றலுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்த கூட்டத்தில் தலைவர் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் நிதி ஆணைகுழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக சில ஆணைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளமுடியவில்லை. ஆளுநர்கள் முன்மொழிந்து ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்கள் வெளிபாடுகளை சம்பந்தப்பட்டவர்களிற்கு எடுத்துச்செல்ல உடன்பாடு காணப்பட்டது.

பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் பகிரப்பட்ட பொறுப்புகளின் கீழ் மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, அந்தந்த நிரல் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட சில நிதியின் மூலம் மாகாணங்களுக்குத் திருப்புவதற்கும் மாகாண சபைகளுக்கு அரசாங்க மூலதன மானியத்தை அதிகரிக்கவும் வேண்டிய அவசியம் உள்ளது.

பின்வரும் விடயங்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன

i.அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தின் உறுப்புரை 154(R) 3 ன் பிரகாரம் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைவாக மாகாணங்களுக்கு போதுமான நிதியை ஒதுக்கீடு செய்வது அரசின் கட்டாயமாகும் .

ii. தேசிய பாதீடானது நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மாகாணங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது பிரதிபலிக்கவேண்டும் .

iii. நிதி ஆணைக்குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட நிதியை பெறுவது மற்றும் குறித்த நேரத்தில் திறைசேரியில் இருந்து விடுவிப்பை பெறுவதும் மாகாணசபைகளின் பொறுப்பாகும்.

iv. தேசிய அமைச்சுக்களால் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களின் கீழ் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்துவது மாகாண நிறுவனங்களின் ஈடுபாடு இல்லாமல் அதன் நோக்கங்களை திறம்பட அடைய முடியாது. எனவே, இந்த திட்டங்கள் மாகாண சபைகளின் மூலம் ஒப்புக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி கொள்கை கட்டமைப்பிற்குள் செயல்படுத்தப்பட வேண்டும்.

vi. அனேகமாக அனைத்து நேரடி மற்றும் மறைமுக வரிகளும் மத்திய அரசால் அறவிடப் படுகின்றன, எனவே, இரு அமைப்புக்களின் சேவை வழங்கலின் அளவைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்திற்கும்

மாகாண சபைகளுக்கும் இடையில் இந்த நிதி விநியோகிக்கப்பட வேண்டும். அதன்படி 2020 ஆம் ஆண்டின் தேசிய வரவு செலவு மொத்த மூலதன பாதீடு செலவினங்களில் குறைந்தபட்சம் 25% ஐ 2020 முதல் மாகாண சபைகளுக்கு மூலதன மானியமாக வழங்குவதற்கான தீர்மானத்தை ஆளுநர்கள் முன்மொழிந்தனர்

v. மாகாணங்களின் கௌரவ ஆளுநர்கள் போதுமான நிதிகளுக்கான அரசியலமைப்பு உரிமைகள் மற்றும் நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களை செயல்படுத்துவது குறித்து சட்டப்பூர்வ விளக்கங்களை பெற ஒப்புக்கொண்டனர்.

Vi. ஆளுநர்கள், மாகாண சபைகள் தொடர்பான அடிப்படை பிரச்சினைகள் சம்பந்தமாக பிரதம செயலாளர்கள், நிதி அமைச்சின் செயலாளர், நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகள் ஆகியோரின் பங்களிப்புடன் ஜனாதிபதியுடனான ஒரு கலந்துரையாடலுக்கான யோசனையை முன்வைத்தனர்.

24. ஐந்து மாகாணங்களின் நடுதரகால நிலையான அபிவிருத்தி திட்டங்களை நிபுணர் குழுவுக்கு முன்வைத்தல்

யு.என்.டி.பி.இன் தொழில்நுட்ப உதவியுடன் ஊவா, சபரகமுவ, மத்திய, வட மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளால் தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டு நடுதரகால நிலையான அபிவிருத்தி திட்டங்கள் நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளர், நிலையான அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம், தேசிய பாதீடு, தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்கள பிரதிநிதிகள், அந்தந்த மாகாணங்களின் பிரதி பிரதம செயலாளர்கள்(திட்டமிடல்) மற்றும் யுஎன்டிபி பிரதிநிதிகள் அடங்கலான குழுவுக்கு முன்வைக்கப்பட்டது.

திட்டங்களை மேலும் மேம்படுத்துவதற்காக நிபுணர் குழுவிலிருந்து பெறுமதியான கருத்துகளைப் பெறுவதற்கும் அவற்றை அந்த மாகாணங்களின் ஒட்டுமொத்த நடுத்தரகாலத் திட்டங்களாக அங்கீகரிப்பதற்கும் ஒரு கலந்துரையாடலாக இது அமைத்தது . இந்தத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான ஆலோசகர்களாக பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் மற்றும் மாகாணங்களின் மூத்த பணியாளர்கள் இருந்தனர்.

25. சமமான பிராந்திய அபிவிருத்தி குறித்த கற்கைக்கான விதிமுறை குறிப்புக்களை உருவாக்குதல்

நிதி ஆணைக்குழுவில் 2019 மார்ச் 8 ஆம் திகதி சமமான பிராந்திய அபிவிருத்தி குறித்து தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம், மத்திய வங்கி, தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் இறைவரி கொள்கைத் திணைக்களம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து குறிப்பு விதிமுறைகள் (TOR) செயல்பாட்டுக் குழுவால் தயாரிக்கப்பட்டு மற்றும் வழிநடத்தல் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. முன்மொழியப்பட்ட வழிநடத்தல் குழு, நிதி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் செயலாளர், தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம், தேசிய திட்டமிடல், இறைகொள்கை, தேசிய பாதீடு மற்றும் மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் பிராந்திய மேம்பாட்டுத் துறை திணைக்களங்களின் பிரதிநிதிகளை கொண்டுள்ளது .

26. மதிய வங்கியின் பிராந்திய அபிவிருத்தி பணிப்பாளருடனான கலந்துரையாடல்

மதிய வங்கியின் பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்துடன் கிராமிய கடன் வசதிகள் குறித்து 2019 மே 27 அன்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இக் கலந்துரையடலில் நிதி ஆணைக்குழுவின் பணிப்பாளர்கள் மற்றும் உதவி பணிப்பாளர்கள் பங்கேற்றனர். நிதி உள்ளடக்கம், கிராமிய அபிவிருத்தி

மற்றும் கிராமிய கடன் வசதிகள் மற்றும் மாகாண திட்டத்தில் அதன் பொருந்தக்கூடிய தன்மை பற்றிய விடயங்கள் சிறந்த முறையில் விவாதிக்கப்பட்டன

27. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்துடனான இணைந்த ஆய்வு கற்கைகள்

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம் நிதி ஆணைக்குழுவுடன் இணைந்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சம்பந்தமாக ஆராய்ச்சி கற்கைகளை ஆரம்பித்துள்ளது. விதிமுறைக்குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டதுடன் ஆலோசகர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முன்மொழிவுகள் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனம் மற்றும் நிதி ஆணைக்குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டது

28. **உலக வங்கியின் நிதியுதவியுடனான பொது கல்வி நவீனமயமாக்கல் திட்டம்**

2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டம் (GEM) உலக வங்கியால் 100 மில்லியன் அமெரிக்க டாலர் மானியத்துடன் நிதியளிக்கப்படுகிறது, இதன் நோக்கமானது பொதுக் கல்வி முறையின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் சேவையை வலுப்படுத்துதல் மற்றும் சர்வதேச வளர்ச்சிக்கு ஏற்ப இலங்கையில் நடுத்தர வருமானம் மற்றும் உயர் வருமான கல்வி முறைகளில் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி முறையை நவீனமயமாக்குதலாகும். திட்ட அமுலாக்கல் காலம் 2018-2024 ஆகும்.

முதன்மை திட்ட கூறுகள், தரத்தை மேம்படுத்துதல் மற்றும் முதன்மை மற்றும் இடைநிலைக் கல்வி மற்றும் திட்ட செயல்பாடு மற்றும் தொழில்நுட்ப சேவையினை வலுப்படுத்துகின்றன.

திட்டத்தை செயல்படுத்த 48 உறுப்பினர்களைக் கொண்ட வழிநடத்தல் குழு நியமிக்கப்பட்டுள்ளது. வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்களில் நிதி ஆணைக்குழு தலைவரும் ஒருவராவார். வழிநடத்தல் குழு கூட்டங்கள் காலாண்டு அடிப்படையில் நடத்தப்படுகின்றன.

29. புதிய மகாண வீதி அபிவிருத்தி திட்டம்

இத்திட்டத்தின் முக்கியநோக்கமானது வீதி வலையமைப்பின் அணுகல் மற்றும் சொத்து முகாமைத்துவதை அதிகரிப்பதுவும் வீதி திணைக்கள முறைமைகள் மற்றும் செயல்பாடுகளை வலுப்படுத்துவதுமாகும். இந்த திட்டத்தில் இரண்டு முக்கிய கூறுகள் உள்ளன, அதாவது மாகாண வீதி திட்ட நிதியீட்டம் மற்றும் சொத்து முகாமைத்துவம், வீதி பாதுகாப்பு மற்றும் நிறுவன வலுப்படுத்தல் என்பனவாகும். மாகாண வீதி திட்டத்தின் நிதியுதவியின் கீழ், ஒன்பது மாகாணங்களில் சுமார் 500 கி.மீ முன்னுரிமை மாகாண வீதிகளின் நிர்மாணம் மற்றும் / புனர் நிர்மாணம் / மேம்படுத்தல் ஆகியன 5 ஆண்டு பராமரிப்பு காலத்துடன் மேற்கொள்ளப்படும். சொத்து முகாமைத்துவமானது வீதி பாதுகாப்பு மற்றும் நிறுவன வலுப்படுத்தும் கூறு, சொத்து முகாமைத்துவ கட்டமைப்பை மேம்படுத்துதல், விவசாயம் உணவு மதிப்பு சங்கிலிகள் மற்றும் நிறுவன திறன் ஆகியவற்றிற்கான இணைப்புக்களை நிறுவுதல் ஆகியவற்றை கொண்டுள்ளது. நிதி ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் திட்ட உருவாக்கம் மற்றும் மீளாய்வு கூட்டங்களில் பங்குபற்றினர்.

30. **இலங்கையில் குழந்தை பராமரிப்பு மையங்களுக்கான தேசிய வழிகாட்டல்களை அமுல்படுதுவதற்கான கலந்துரையாடல்.**

இவ் விடயம் சம்பந்தமாக 2019 ஆண்டு மே 16 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் மகளிர் சிறுவர் விவகார அமைச்சும் இணைந்து தயாரித்த வழிகாட்டல்களை பரிசீலனை செய்யும் முகமாக நடைபெற்றது. இதில் அனைத்து மாகாண ஆணையாளர்களையும் மேலதிக கவனத்திற்காக அழைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. நிதி ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களும் இக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

31. குழந்தை சிறுபராய அபிவிருத்திக்கான கூறுகள் உப கூறுகள் சம்பந்தமான பயிற்சிப் பட்டறை

குழந்தை சிறுபராய அபிவிருத்திக்கான கூறுகள் உப கூறுகளை நிர்ணயிப்பது சம்பந்தமான பயிற்ச்சி பட்டறை ஒன்று நிதி ஆணைக்குழுவினால் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 4 ஆம் திகதி நிரல் கல்வி அமைச்சின் பணிப்பாளர்கள் , மாகாண குழந்தை சிறுபராயத்திற்கு பொறுப்பான பிரதானிகளின் பங்குபற்றலுடன் நிதி ஆணைக்குழுவில் ஏற்பாடு செய்யப்பட்டது. குழந்தை சிறுபராய அபிவிருத்தி துறைக்கான கூறுகள் மற்றும் உப கூறுகளின் மேம்படுத்தப்பட்ட பதிப்பு நிதி ஆணைக்குழுவின் வருடாந்த அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களில் இணைப்பதற்காக உருவாக்கப்பட்டது.

32. மாகாண விளையாட்டுத்துறை அபிவிருத்தி சம்பந்தமான கூட்டம்

2019 ஜனவரி 17 ஆம் திகதி ஒன்பது மாகாணங்களுக்கான விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர்களுடன் ஒரு கூட்டம், நிதி ஆணைக்குழுவில் நடைபெற்றது. விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமும் இந்த கூட்டத்திற் பங்குபற்றினார்.

பொருத்தமான கொள்கை தீர்மானங்களை மேற்கொள்ள அனைத்து மாகாணங்களிலும் விளையாட்டு துறைகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் பற்றி விவாதிக்க அனைத்து பிரதிநிதிகளுக்கும் ஒரு வாய்ப்பை வழங்குவதே இக் கூட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

33. கூட்டுறவு, சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு, சமூக சேவைகள் மற்றும் பிள்ளை பராய அபிவிருத்தி ஆகிய துறைகள் சம்பந்தமான கூட்டங்கள்

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவில் ஒன்பது மாகாணங்களின் கூட்டுறவு, சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சமூக சேவைகள் ஆணையாளகளுடன் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தின் முக்கிய நோக்கமானது , முன்னைய ஆண்டுகளின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடி தேவையான பரிந்துரைகள் வழங்குதலாகும்.

34. பிரஜைகள் பாதீடு

கிழக்கு மாகாண சபை யுனிசெப்பின் உதவியுடன் முதல் "பிரஜைகள் பாதீடட்டை" தயாரித்து வைபவ ரீதியாக நவம்பர் 6, 2019 அன்று திருகோணமலையில் தொடங்கப்பட்டது. குடிசன பாதீடு பொது பொறுப்புக்கூறலுக்கான ஒரு முக்கிய கருவியாகும் மற்றும் மக்களின் பங்களிப்பை அதிகரித்தது மற்றும் பொது நிதி எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது மற்றும் பயன்படுத்தப்படுகிறது என்பதை நன்கு புரிந்துகொள்ள பிரஜைகளுக்கு உதவுகிறது. இந்த முன்முயற்சி வைபவத்தில் நிதி ஆணைக்குழுவின் தலைவரும் செயலாளரும் பங்கேற்றனர்.

35. மாகாண சபைகளின் நல்லாட்சியை மேம்படுதுவதற்கான பயிற்சி பட்டறை

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவால் மாகாண சபைகளின் நல்லாட்சியை மேம்படுதுவதற்கான ஒரு நாள் பயிற்சி பட்டறை நிதி ஆணைக்குழுவில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒன்பது மாகாணங்களின் அனைத்து பிரதம செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள்(நிதி,திட்டமிடல், பொறியியல், நிர்வாகம், ஆளணி மற்றும் பயிற்சி) பிரதம உள்ளக கணக்காய்வாளர்கள் ஆகியோர் ஆர்வமுடன் இப் பயிட்சிபட்டறையில் கலந்துகொண்டனர்.

*மதிய வங்கியின் ஆளுநர், திறைசேரி பிரதி செயலாளர், ஆணைக்குழுவின் உறுபினர்கள் மற்றும் திரு.அசோகா. **S.**குணவர்த்தன, நிதி ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர், ஆகியோர் சொற்பொழிவு, முன்வைப்புகளை மேற்கொண்டு குழு கலந்துரையாடல்களிலும் பங்குபற்றினர்.*

36. பயனுள்ள வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கு கொழும்பு மாநகர சபைக்கு உதவுதல்

மேல் மாகாண சபையின் வேண்டுகோளுக்கிணங்க கொழும்பு மாநகரசபைக்கு பயனுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட வருடாந்த அபிவிருத்தி திட்டம் தயாரிப்பது சம்பந்தமான கூட்டம் ஒன்று நிதிஆணைக்குழுவின் செயலாளர், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், மேல் மாகாணசபையின் பிரதி பிரதம செயலளர் (திட்டமிடல்), மாநகர ஆணையாளர் மற்றும், பிரிவுகளின் பிரதானிகளுடன் நிதி ஆணைகுழுவில் நடைபெற்றது.

கொழும்பு மாநகரசபையின் ஆணையாளரால் ஒருநாள் பயிற்ச்சி பட்டறை ஒன்று அவர்களின் அலுவலகத்தில் கொழும்பு மாநகரசபையின் பொருத்தமான உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் ஏற்பாடு செய்யப்பட்டது. பணிப்பாளர் (கொள்கை ஆராய்ச்சி). பணிப்பாளர் (திட்டமிடல்), உதவிப் பணிப்பாளர்(ஆளணி மீண்டெழும் பாதீடு) ஆகியோர் வளவாளர்களாக இப்பயிற்சி பட்டறைக்கு வசதியளிப்பு செய்தனர். இப்பட்டறையில் கொழும்பு மாநகரசபையின் அவசியமான துறைகளுக்கு கூறுகள் உப கூறுகளுடன் கூடிய ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட திட்டகட்டமைப்பு வருடாந்த அபிவிருத்தி திட்டதிற்காக உருவாக்கப்பட்டது .

37. **அலுவலர்களின் மனிதவள அபிவிருத்தி**

37.1 **அலுவலர்களின் திறன் அபிவிருத்தி**

விருந்தினர் விரிவுரைகளை நிதி ஆணைகுழுவானது தொடர்ந்து நிதி ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கு அவர்களின் இயலுமை அறிவைமேம்படுத்துவதற்காக ஏற்பாடு செய்தது 2019 ஆம் ஆண்டு பின்வரும் விருந்தினர்கள் பின்வரும் விசேட தலைப்பில் ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கு விரிவுரைகளை மேற்கொண்டனர் .

பெயர்	**தலைப்பு**	**திகதி**
டாக்டர் பி.விஷாகா ஹிடலகே	இலங்கையில் அனர்த்தங்கள்	*2019.01.10*
பேராசிரியர். அஜித் டி அல்விஸ்	ஆக்கச்சிந்தனை	*2019.05.24*
டாக்டர்.தினேஷ் ஆட்டிகள, டாக்டர் .சாந்தா அமரசிங்க திரு. வீரகொட-மொரடுவ பல்கலைக்கழகம்	பொருள் அறிவியல் மற்றும் பொருளாதாரம்	*2019.05.27*
டாக்டர்.அஜித் ரோகன கொலோனே	வெற்றி	*2019.06.25*
கலாநிதி.வின்யா ஆரியரத்ன	சமமான பிராந்திய அபிவிருத்தி	*2019.09.19*
கலாநிதி. பார்ட் கெலம்	மாகாண சபைகளும் அதிகாரப்பகிர்வும்	*31.10.2019*
திருமதி. லூயிஸ் மோரியரா டெனீல்ஸ்	சனத்தொகை பாதீடு	*22.11.2019*
திரு. துள்சி அலுவிஹார	கொழும்பு துறைமுக நகர திட்டம் மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தில் அதன் தாக்கங்களும்	*27.11.2019*
திரு. *A.G.K.M.U.*கமகுமார	உளவியல் சூழல்	*04.12.2019*

*37.2***அலுவலகர்களினால் பங்குபற்றிய பயிற்ச்சி நிகழ்ச்சிகள்**

2019 ஆம் ஆண்டு பின்வரும் அலுவலர்கள் பயிற்ச்சி நிகழ்சிகளில் பங்குபற்றினர்

உள்ளூர் பயிற்ச்சி

பெயர்	தலைப்பு	திகதி
திருமதி.டபிள்யூ.டி.ஐ.டி .இரேஷிகா	களஞ்சியம் மற்றும் இருப்பு முகாமைத்துவம்	*2019.04.25-2019.04.26*
திருமதி விஜிதா அபேவிக்ரம	களஞ்சியம் மற்றும் இருப்பு முகாமைத்துவம்	*2019.04.25-2019.04.26*
திருமதி எஸ்.என்.சஞ்சீவனி	நிறைவேற்று அதிகாரிகளுக்கான கொள்முதல் நடைமுறைகள்	*2019.06.06/ 2019.06.13 / 2019.06.20*
திரு *S.M.R.S.* பண்டார	நிலைத்து நிற்க கூடிய அபிவிருத்தி இலக்கு சம்பந்தமாக *OPA* வால் இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த கூட்டம்	*2019.09.18*
*S.D.C.*சந்திரசிறி	அரச ஊதிய முறை *(payroll system)*	*2019.09.04 / 2019.09.05 / 2019.09.06*
திருமதி. திலோகா அபயசேகர செல்வி. சந்திரா மாலனி திருமதி. நிமாலி ரத்னாயக	இலங்கை மத்திய வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட பொருளியல் ஆராய்ச்சி	*2019.07.05 - 2019.09.06* ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளில் மட்டும்
திருமதி. *K.A.M.* லங்காணி	அரச துறையில் கொள்முதல் செயல்முறை	*2019.07.18-2019.07.26*
திருமதி. *S.N..* சன்ஜீவனி	பெறுபேறு மதிப்பீடு மற்றும் முக்கிய செயல் பாட்டு குறியீடுகளை அமைதல் *(KPI)*	*25.11.2019*
திருமதி.திலோகா அபயசேகர	கொள்முதல் வழிகாட்டி திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறைகள்	*27-29.11.2019*
பணிப்பாளர்கள்,உதவிப்பணிப்பாளர்கள்,உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் ,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டதாரி பயிலுனர்கள்.*(34* அலுவலர்கள்*)*	புள்ளிவிபரத்தில் கணனியின் பயன்பாடு சம்பந்தமான பயிற்சி	*9-20.12.2019*
திருமதி. *S.R.* இடம்பிட்டிய செல்வி.நதீகா தமயந்தி	ஒழுக்க நடைமுறை	*18-20.12.2019*

வெளியூர் பயிற்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றல்

பெயர்	**தலைப்பு**	**திகதி**
திரு . *V.*மகேந்திரராஜா	பாலின சமத்துவ பாதீடு பற்றிய ஒத்துழைப்பு நாடுகளின் கருத்தரங்கு -இந்திய அரசு	*2019.09.11 - 2019.011.12*
திரு. *P.R.N.* சுஜீவ	சீனாவின் அபிவிருத்தி அனுபவம் மற்றும் அதன் சீர்திருதங்கள் மற்றும் இலங்கை – சீனாவிற்கான கொள்கைகளுக்கான திறப்புக்கள் பற்றிய கருத்தரங்கு	*2019.09.02 - 2019.10.01*
செல்வி. *T.G.* சந்திரா மாலனி திருமதி. *A.W.K.S.*ரணசிங்க	சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு பற்றிய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அமைச்சுக்களின் கருத்தரங்கு – *2019*	*2019.09.18 -2019.09.24*
திரு *S.M.R.S.* பண்டார	அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான நிதியிடல் அபிவிருத்தி மற்றும் சர்வதேச வறுமை ஒழிப்பு சம்பந்தமான அமைசுகளின் *2019* பயிற்சிப்பட்டறை - சீனா	*2019.10.15* *2019.10.24*

ஆட்சேர்ப்பு மற்றும் இடமாற்றம்

2019 ஆம் ஆண்டில் பின்வரும் உத்தியோகத்தர்கள் நிதி ஆணைக்குழுவில் இணைந்து கொண்டனர்

பெயர்	**நிலை**	**இணைந்த திகதி**
திரு**.** *V.*மகேந்திரராஜா	பணிப்பாளர்	*2019.01.01*
திரு.*S.D.C.*சந்திரசிறி	கணக்காளர்	*2019.06.25*
திருமதி . *S.K.* கொத்தலாவல	பிரதம கணக்காளர்	*2019.07.02*
செல்வி.. *S. A.* ஹன்சனி சந்தமாளி	தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	*2019.07.01*
திரு .*D.V.U.* குணவர்த்தன	அலுவலக உதவி சேவையாளர் - தற்காலிகம்	*2019.08.01*
திரு .*S.P.P.* விஜேசிங்க	உதவிப் பணிப்பாளர்	*2019.12.12*
திரு .*K.P.D.*நந்தன	சாரதி	*2019.12.16*

பின்வரும் உத்தியோகத்தர் நிதி ஆணைக்குழுவிலிருந்து இடமாற்றம் பெற்று சென்றார்

பெயர்	**நிலை**	**இடமாற்ற திகதி**
திரு .சுசந்த ரணசிங்க	பிரதம கணக்காளர்	*2019.07.02*

மேலும், 2019 ஆகஸ்ட் 1 ஆம் திகதி 15 பட்டதாரி பயிலுனர்கள் நிதி ஆணைகுழுவில் இணைந்துகொண்டனர்

38 . ஊழியர்களின் கற்கை

கடமைகளை நிறைவேற்றும் பணியில், நிதி ஆணைக்குழு தொடர்ந்து ஊழியர்கள் ஆய்வுகள் / ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறது.இவ்வருட பகுதியில் பின்வரும் சிறு கற்கைகள் ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டன

- மத்திய அரசிடமிருந்து மாகாணசபைக்கு வருவாயை மாற்றல்
- மாகாணங்களால் சேகரிக்கப்படும் மறைமுகவரி (தேசத்தை கட்டியெழுப்பும் வரி)
- நிதி ஆணைக்குழுவின் நிர்வாகப் பிரிவு நிதி ஆணைக்குழுவின் மனித வளக் கொள்கை தொடர்பாக கையேடு வரைபு ஒன்றினை தயாரித்து.
- சமமான பிராந்திய அபிவிருத்தி – தேசிய திட்டமிடல் கொள்கை திணைக்களம் மற்றும் நிதி ஆணைகுழுவின் நடைமுறைகள்
- மாகாண திட்டமிடல் செயல்முறை - கிழக்கு மாகாண சபையின் நடைமுறை
- மாகாணங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய போதுமான நிதியை வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்வது சம்பந்தமான கற்கை
- புவியியல் அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் வறுமைக்கான தொடர்பு சம்பந்தமான கற்கை
- நிரல் அமைசுக்களின் பாதீட்டு ஒதுக்கீடுகளின் மாகாணங்களுகிடையிலான பகிர்வு சம்பந்தமான கற்கை
- சமச்சீர் பிராந்திய அபிவிருத்தி குறிகாட்டிகள் பற்றிய ஒரு கற்கை(நடந்து கொண்டிருக்கிறது)
-
- நிதி ஒதுக்கீட்டிற்கான ஒவ்வொரு துறைக்கும் பகுத்தறிவு குறிகாட்டிகளை உருவாக்குதல்
- புவியியல் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறுமை தொடர்பான உறவு
- கல்வி மற்றும் சுகாதார துறைக்கான கற்கைகள்

39. துறைகளுக்கான கற்கைகளும் முன்வைப்புக்களும்

நிதி ஆணைகுழுவானது மாகாண சபைகளுகிடையில் அரசின் கொடையை மாகாண சபைகளின் கீழ் வரும் 23 துறைகளுக்கான நிகழ்ச்சி திட்டங்களை உள்ளடக்கிய வருடாந்த அபிவிருத்தி திட்டத்திற்கு நிகழ்ச்சி திட்ட ஒழுங்கமைப்பை மேற்கொள்கிறது. நிதி ஆணைக்குழுவானது ஒவ்வாரு துறைகளுக்குமான வளஆற்றல், தகுதிநிலை, செயல்திறன் மற்றும் முதலீடு சம்பந்தமான கற்கை நெறிகளை மேற்கொள்கிறது.

நிதி ஆணைக்குழுவின் உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டதாரி பயிலுநர்கள் ஒவ்வாரு குறுப்பிட்ட துறைக்குமான கற்கைகளை முன்னெடுக்கவும் அவதானிப்புக்களை முன்வைக்கவும் பணிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை நிதி ஆணைக்குழுவின் தீர்மான நடைமுறைகளிற்கு பயன்படுத்தப்படுகிறது. இப்பயிற்சியின் முக்கிய நோக்கமானது நிதி ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களின் ஆற்றலையும் திறமையும் மேம்படுத்துவதாகும். இதன்படி நான்காம் காலாண்டுப்பகுதியில் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களினால் முன்வைப்புகள்

மேற்கொள்ளப்பட்டதுடன் தரவுகளும் அவதானிப்புக்களும் துறைகளுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகள் தயாரிப்பில் இணைத்துக்கொள்ள இனம் காணப்பட்டது.

40. குழுக்களை சீரமைத்தல்

ஆணைக்குழுவின் செயல்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு குறிப்பாக தொழில் நுட்பம் சார் ஊழியர்களை பயன்மிக்க வகையில் பயன்படுத்துவது தொடர்பில் ஆணைக்குழு நிர்வாக மற்றும் நிதி செயல்பாடுகளில் குழுக்களை அமைப்பது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முடிவு செய்தது.

41. உற்பத்தித்திறன் மேம்பாடு

ஆணைக்குழு அதன் செயல்த்திறனையும் நன்மதிப்பையும் மேம்படுத்துவதற்கான முக்கியத்துவத்தினை உணர்ந்தது. அதன்படி ஆணைக்குழுவின் செயல்பாடுகளை தன்னியக்கமாகக்குவதற்கான சாத்திய கூறுகளை அவதானத்திற் கொண்டு அனைத்து பணிப்பாளர்களும் இந்த அம்சத்தை சரியாக ஆய்வு செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன

42. நிதி ஆணைக்குழுவின் கூட்டங்கள்

- இவாண்டில் பதினொரு ஆணைக்குழு கூட்டங்கள் நடைபெற்றன
- ஒழுங்கு முறையாக ஒவ்வொரு ஆணைக்குழு கூட்டத்திற்கும் சிறப்பு கலந்துரையாடலுக்கு முன்னதாகவும் ஆணைக்குழுவின் உப குழுக்கள் சந்தித்தன
- பிரதான அலுவலர் குழு கூட்டங்கள் வாராந்தம் நடைபெற்றன.
- ஊழியர்களின் கூடங்கள் வழமையான முறையில் நடைபெற்றதன.

43. ஆணைக்குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்கள்

- 2020 ஆம் ஆண்டுக்கான மாகாண மீண்டெழும் மற்றும் மூலதன தேவைக்கான மதிப்பீடு
- மூலதன செலவு பகிர்வில் கூட்டு குறியீட்டில் வறுமை தலை எண்ணிக்கை விகிதத்திற்கு பதிலாக வறுமைக் கோட்டின் கீழ் மக்கள் தொகை பயன்பாடு
- மாகாண சபைகள் தங்களது வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை கண்டறிவதுடன் கூட்டு ஆய்வு ஒன்று நிதி ஆணைக்குழுவின் உதவியுடன் இறைவரி திணைகளதினால் மேற்கொள்ளப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டு தொடக்கம் மாகாண சபைகள் தங்களது நிதித் தேவைகளை சமர்ப்பிக்கும் போது வருமான அதிகரிப்பிற்கான முன்மொழிவுகளையும் சமர்பிக்க வேண்டும் .
- மேதகு ஜனாதிபதிக்கான நிதி ஆணைக்குழுவின் 2020 ஆம் ஆண்டின் பரிந்துரைகள் (பாதீடு மற்றும் கொள்கைப்பரிந்துரைகள்)
- மாகாண பாதீட்டு நோக்கத்திற்காக நியமங்களை அபிவிருத்தி செய்தல்
- கொழும்பு மாவட்டத்தின் தெரிவுசெய்யப்பட்ட மாநகர சபைகளின் நிதிநிலைமை சம்பந்தமான தரவுகள்

- பத்திரிக்கைகளில் உள்ள மாகாணசபைகள் முறைமைக்கு எதிரான விமர்சனங்கள்
- தேசத்தை கட்டியெளுப்பும் வரியை ரத்து செய்வதனால் மாகாண நிதியில் ஏற்படும் விளைவு
- வேலை ஆய்வின் இடைக்கால அறிக்கை
- முதல் மூன்று ஆண்டுகளில் சுயாதீன குழுக்களினது மதிப்பீடு: தகவல்களை சேகரிக்கும் கருவி

44. பிரதான அலுவலர் குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்கள்

- மனிதவள தேவை மதிபீடு 2020
- மதிப்பீட்டு துறைகளுக்கான நியம குறிகாட்டிகளின் முன்வைப்பு
- நிதி ஆணைக்குழுவின் சட்ட வரைபு
- புவியியல்,வறுமை,திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்கிடயான இடைத்தொடர்பு சம்பந்தமான கட்டுரை.
- மாகாண மீண்டெழும் செலவீனங்கள் மற்றும் மூலதன செலவீனங்கள்
- சக்திமிக்க கணக்காய்வு
- வருடாந்த அபிவிருத்தி திட்டத்திற்கான வழிகாட்டியினை தயாரித்தல் 2020

45. உப குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்கள்

- தேவை மதிப்பீட்டுக்கான துறை ரீதியான சந்திப்புக்களை ஒழுங்கு செய்தல்
- ஒருங்கிணைந்த திட்டமிடல் முறைமை சம்பந்தமாக தேசிய திட்டமிடல் திணைக்களத்துடனான சந்திப்பு
- நிதி ஆணைக்குழுவின் தரத்தினை அபிவிருத்தி செய்தல்
- நிதி ஒதுக்கீடுகளில் ஒவ்வொரு துறைக்காகவும் நியாயமான சுட்டிகளை அபிவிருத்தி செய்தல்
- நிதி உள்ளீடுகளுக்கான சந்திப்பு
- மாகாணங்களில் நிரல் அமைச்சுகளால் ஏற்படும் செலவினங்களை தீர்மானித்தல்
- மனிதவள தேவை மதிபீடு 2020
- மதிப்பீட்டு துறைகளுக்கான நியம குறிகாட்டிகளின் முன்வைப்பு
- நிதி ஆணைக்குழுவின் சட்ட வரைபு
- புவியியல்,வறுமை,திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்கிடயான இடைத்தொடர்பு சம்பந்தமான கட்டுரை.
- மாகாண மீண்டெழும் செலவீனங்கள் மற்றும் மூலதன செலவீனங்கள்
- சக்திமிக்க கணக்காய்வு
- வருடாந்த அபிவிருத்தி திட்டத்திற்கான வழிகாட்டியினை தயாரித்தல் 2020

46. நிதி ஆணைக்குழுவுக்கான பதீட்டு ஒதுக்கீடு

2019 ஆம் ஆண்டில், நிதி ஆணைக்குழுவுக்கு மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா .74.91 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்கான பயன்பாட்டு விகிதம் 94% ஆகும். 2016 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய சம்பள கட்டமைப்பை (சுற்றறிக்கை எண் 03/2016) அமல்படுத்துவதன் மூலம் அடிப்படை சம்பளம், மேலதிக நேரம் மற்றும் பிற கொடுப்பனவுகளின் அதிகரிப்பு காரணமாக தனிப்பட்ட ஊதியங்கள் தொடர்ச்சியான செலவினங்களின் குறிப்பிடத்தக்க பகுதியைக் குறிக்கின்றன.

மீண்டெழும் செலவீனங்களுக்கு மேலதிகமாக மூலதன செலவினங்களுக்காக ரூபா .119.39 மில்லியன் ஒதுக்கப்பட்டத்து. மூலதன செலவினங்களின் பயன்பாட்டு விகிதம் 95% ஆகும். புதிய அலுவலக கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான கொடுப்பனவு மூலதன செலவினத்தின் குறிப்பிடத்தக்க பகுதியைக் குறிக்கிறது.

வாக்கு தலைப்பு	**கொடுபனவு வகை**	***2019 (ரூபா. 000)***				***2018 (ரூபா. 000)***			
		மதிப்பீடு	**உண்மை செலவு**	**சேமிப்பு**	**மதிப்பீட்டில் உண்மை செலவீனம் %**	**மதிப்பீடு**	**உண்மை செலவு**	**சேமிப்பு**	**மதிப்பீட்டில் உண்மை செலவீனம் %**
	மீண்டெழும் செலவினம்	**74,910**	**70,609**	**4,340**	**94%**	**58,350**	**55,984**	**2,366**	**96%**
	தனிநபர் சம்பளங்கள்	**41,700**	**40,741**	**959**	**98%**	**35,100**	**33,853**	**1,247**	**96%**
1001	சம்பளங்கள் மற்றும் ஊழியங்கள்	28,700	28,354	346	99%	23,400	23,116	284	99%
1002	மேலதிக மற்றும் விடுமுறை கொடுப்பனவுகள்	1,200	1,098	102	92%	600	579	21	97%
1003	ஏனைய கொடுப்பனவுகள்	11,800	11,289	511	96%	11,100	10,158	942	92%
	பிரயாணப் படிகள்	**1,000**	**894**	**106**	**89%**	**630**	**604**	**26**	**96%**
1101	உள்ளூர் பயணம்	450	415	35	92%	200	174	26	87%
1102	வெளியூர் பயணம்	550	479	71	87%	430	430	0	100%
	வழங்கல்	**4,528**	**4,251**	**277**	**94%**	**3,640**	**3,517**	**123**	**97%**
1201	காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவை பாடுகள்	1,550	1,443	107	93%	1,100	1,099	1	100%
1202	எரிபொருள்	2,400	2,241	159	93%	2,250	2,130	120	95%
1203	உணவு மற்றும் சீருடை	28	28	0	100%	40	40	0	100%

1205	ஏனைய வழங்கல்கள்	550	539	11	98%	250	248	2	99%
	பராமரிப்பு	**4,652**	**3,316**	**1,336**	**71%**	**2,100**	**2,057**	**43**	**98%**
1301	வாகன பராமரிப்பு	1,900	1,751	149	92%	1,500	1,468	32	98%
1302	பொறி மற்றும் இயந்திர பராமரிப்பு	1,452	1,007	445	69%	600	589	11	98%
1303	கட்டிடங்கள் மற்றும் கட்டிட பராமரிப்பு	1,300	558	742	43%	0	0	0	0%
	சேவைகள்	**22,030**	**20,659**	**1,371**	**94%**	**16,080**	**15,172**	**908**	**94%**
1401	போக்குவரத்து (சேவைகள்)	3,800	3,715	85	98%	3,300	3,240	60	98%
1402	தபால் மற்றும் தொடர்பாடல் (சேவைகள்)	2,000	1,643	357	82%	1,500	1,364	136	91%
1403	நீர் மற்றும் மின்சாரம் (சேவைகள்)	6,300	5,921	379	94%	2,500	2,221	279	89%
1404	வாடகை மற்றும் உள்ளூர் வரி (சேவைகள்)	820	805	15	98%	1,320	1,320	0	100%
1406	குத்தகை வாகனதிற்கான வட்டி கொடுப்பனவு	810	809	01	100%	-	-	-	-
1409	ஏனைய சேவைகள்	8,300	7,766	534	94%	7,460	7,027	433	94%
	மாற்றல்கள்	**1,000**	**748**	**252**	**75%**	**800**	**782**	**18**	**98%**
1506	கடனுக்கான வட்டி	1,000	748	252	75%	800	782	18	98%
	மூலதன செலவீனம்	**19,390**	**113,119**	**6,191**	**94%**	**310,950**	**217,495**	**93,455**	**70%**
	மூலதன சொத்துக்களின் மேம்பாடும் புனருத்தாபணமும்	**1,300**	**408**	**892**	**31%**	**2,050**	**1,568**	**482**	**76%**
2002	பொறிகள் இயந்திரங்களின் மேம்பாடும் புனருத்தாபணமும்	300	0	300	0%	300	278	22	93%
2003	வாகனங்கள்	1,000	408	592	41%	1,750	1,290	460	74%
	மூலதன சொத்துக்களின் கொள்வனவு	**16,090**	**111,953**	**4,137**	**96%**	**307,850**	**214,903**	**92,947**	**70%**
2102	தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	9,500	7,343	2,157	77%	2,500	2,470	30	99%
2103	பொறிகள்,இயந் திரங்கள் மேம்படும்	5,700	3,729	1,971	65%	18,500	18,470	30	100%

	புனருத்தாபணமும்								
2104	கட்டிடங்கள் மற்றும் கட்டிட அமைப்பு	00,000	100,000	0	100%	286,850	193,963	92,887	68%
2108	குத்தகை வாகனத்திற்கான மூலதன கொடுப்பனவு	890	881	9	99%	-	-	-	-
	இயலளவு விருத்தி	**2,000**	**838**	**1,162**	**42%**	**1,050**	**1,024**	**26**	**98%**
2401	ஊளியர்களது	2,000	838	1,162	42%	1,050	1,024	26	98%

அரச உழியர்களின் முற்பண கணக்கு விபரங்கள் கீழே காட்டியவாறு நிதி ஆணைக்குழுவினது அதிகார எல்லையினுள்

விபரம்	***2019** (ரூபா)*		***2018** (ரூபா)*	
	அங்கீகரிக்கப்பட்ட எல்லை	**உண்மையான எல்லை**	**அங்கீகரிக்கப்பட்ட எல்லை**	**உண்மையான எல்லை**
அதி கூடிய செலவு எல்லை	*3,200,000.00*	*3,071,691.40*	*3,200,000.00*	*2,999,593.50*
அதி குறைந்த பெருகை எல்லை	*1,400,000.00*	*2,578,449.98*	*1,000,000.00*	*1,923,284.07*
அதி கூடிய பட்ச இருப்பு மீதி	*13,000,000.00*	*9,927,441.22*	*13,000,000.00*	*9,359,711.28*